www.tamilarangam.net

# உலகத் தமிழர் எழுச்சிக் கழகம்

## சமூகம்

உலகில் தமிழர்கள் எங்கு வாழ்ந்தாலும் அவர்கள் தமிழர்களே. அவர்களிடையே சாதியில்லை, பிரதேசப் பாகுபாடில்லை. நாட்டுப் பாகுபாடில்லை. எனவே பின்வரும் விடயங்களில் ஒவ்வொருவரும் உடனே வெளிப்படையாக சபதம் எடுக்க வேண்டும்.

(அ) சாதிகளை உச்சரித்தலும், எழுதுதலும் தவிர்த்தல்

(ஆ) சாதிகளை வலியுறுத்தி எழுதிய நூல்கள் பாவிப்பிலிருந்து விலக்கல்.

(இ) பெயரின் முன்னோ பின்னோ சாதிப் பெயரைச் சேர்த்தல் தவிர்த்தல்.

(ஈ) சாதியை முன் வைத்து சமுதாயத்தில் அல்லது அரசியலில் சலுகை பெறல் அல்லது ஆதிக்கம் பெறுதல் தவிர்த்தல்.

(உ) சாதியை முன் வைக்காது வருவாய்க்கேற்ப சமூகத்தை வகுத்து அரசுகள் உதவி பெறத் தூண்டல்.

## பொருளாதாரம்

(அ) மனிதபலம் வீணாக்கப்படக்கூடாது. ஆண்களும், பெண்களும் வருமானம் உள்ள தொழில்களில் ஈடுபட வேண்டும். சோசலிச நாடுகள் போல் ஆண்கள் கடூர வேலைகளையும், பெண்கள் இலகுவான வேலைகளையும் புரியத் தம்மை தயாராக்கி கொள்ள வேண்டும்

(ஆ) தமது பொருளாதார வளர்ச்சிக்காக அரசிடமும் வளர்முக நாடுகளினதும் உதவிகளைப் பெற்று வளர்ச்சியடைய இத்தாபனம் உதவும்.

(இ) தமிழர் நிறுவனங்கள் வளர்ந்த நாடுகளின் உதவிகளை பெற முயலல்.

(ஈ) ஐப்பானியர் போன்று உலக வாழ் தமிழர்களை சுறுசுறுப்பான மக்களாக்க முயலல்.

(உ) தமிழர் எந்த நாட்டில் வாழ்ந்தாலும் கௌரவமான தொழில்களைச் செய்யவும், தொழில்களை கௌரயாக்கி செய்யவும் இந்த நிறுவனம் உதவி அளிக்கும்.

(ஊ) "திரைகடல் ஓடியும் திரவியம் தேடு" என்ற முதுமொழியை கடைப்பிடித்து பெருளாதார வளர்ச்சியைக் கூட்ட நாடு விட்டு நாடு செல்ல உதவி அளிக்கப்படும்.

# உயர் கல்வி வளர்ச்சி

(அ) அடித்தளத்திலிருக்கும் மக்களுக்கு உயர் கல்வியூட்ட உலகவாழ் தமிழரை தூண்டவும், தமிழ்நாடு, இலங்கை போன்ற நாடுகளுக்கு உலக மாணவர்களை அழைத்து கல்வியூட்ட வழிவகுத்தல்.

(ஆ) உலகவாழ் தமிழ் மாணவர்கள் மருத்துவக் கல்வி பெற திருச்சியிலோ, கொழும்பிலோ அல்லது மொறீசஸ் தீவிலோ மருத்துவக் கல்லூரி அமைத்தல் மாணவர் 100 பேர் ஒவ்வொரு வருடமும் பின்வரும் நாடுகளிலிருந்து தெரிவு செய்தல்

தமிழ்நாடு, மலேசியா, இலங்கை மொறிசஸ், தென்னாபிரிக்கா, பிஜி, அமெரிக்க ஐரோப்பிய நாடுகளில் வசிக்கும் தமிழர்

(இ) உலக வாழ் தமிழருக்கென பல்கலைகழகம் நிறுவ வழிவகுத்தல்.

குறிப்பு : இந்த உத்தேச நடவடிக்கைகள் இப்போது பிரசாரம் செய்யப் படுகின்றன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்